நவம்பர் 7, 2023

# பிராம்ப்டன் நகர நிர்வாகம் 2024 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டச் செயல்முறையைத் துவக்கியுள்ளது

*தங்கள் கருத்துக்களைக் கூற பிராம்ப்டன் நகரவாசிகள் மற்றும் வணிகர்கள் அழைக்கப்படுகிறார்கள்*

பிராம்ப்டன், ON – பிராம்ப்டன் நகர மேயரின் முதன் முதலான வரவுசெலவுத் திட்டத்தின் ஒரு அங்கமாக இருந்து, தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள, குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகர்கள் அழைக்கப்படுகிறார்கள். பிராம்ப்டனின் 2024 வரவுசெலவுத் திட்டத்தை வடிவமைக்க உதவுவதில் சமூகத்தினரின் பின்னூட்டக்கருத்து ஒரு முக்கியமான அம்சமாகும்

2024 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட செயல்முறையானது, மேயர் பேட்ரிக் பிரவுன், கவுன்சிலர்கள் மற்றும் அலுவலர்கள், பிராம்ப்டன் நகரக் குடியிருப்பாளர்கள், வணிகங்கள், சமூகக் குழுக்கள் மற்றும் உள்ளூர் பங்குதாரர்களுக்கு எந்தளவுக்கு மிகவும் முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்வதற்காக, பொது மக்களுக்கு தொடர்ச்சியான ஈடுபடுத்தலுக்கான வாய்ப்புகளை வழங்கி உபசரிக்கவிருக்கிறார்கள்.

**உங்கள் கருத்துக்களைக் கூற இந்த நாட்களை ஒதுக்கி வையுங்கள்**

*பிராம்ப்டன் வணிகர்களுக்கான மெய்நிகர் வட்ட மேஜை கலந்துரையாடல்*

செவ்வாய்க்கிழமை, நவம்பர் 21, 2023

காலை 9:30

பதிவு செய்ய, இங்கே க்ளிக் செய்யவும்.

*டெலிஃபோன் டவுன்ஹால்*

மேயர் பேட்ரிக் பிரவுன் மற்றும் நகர அலுவலர்கள் தொலைபேசி டவுன் ஹால் ஒன்றை நடத்துவார்கள்; இது குடியிருப்பாளர்களுக்கு சமூக முன்னுரிமை கொண்ட விஷயங்களைப் பகிர்ந்து

கொள்ளவும், கேள்விகளைக் கேட்கவும், பிராம்ப்டனின் 2024 வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும்போது யோசனைகளை வழங்கவும் வாய்ப்பளிக்கிறது.

செவ்வாய்க்கிழமை, நவம்பர் 21, 2023
மாலை 7 - 8:30

ஒரு அழைப்பினைப்பெற்று செவிமடுப்பதற்காகப் பதிவு செய்ய, இங்கே க்ளிக் செய்யவும்.

குடியிருப்புவாசிகள் ஆன்லைனில் இங்கேயும்கூட கேட்கலாம்.

*அவரவர் வார்டுகளில் காபி அருந்தியபடியான அரட்டைகள்*

ட்ராப்-இன் ஸ்டைல் காபி குடித்தபடியான அரட்டைக்கு மேயர் மற்றும் உங்கள் உள்ளூர் கவுன்சிலர்களுடன் சேருங்கள். தங்கள் யோசனைகள், தீர்வுகள் மற்றும் சமூக முன்னுரிமைகளைப் பகிர்ந்து கொள்ள குடியிருப்பாளர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

**புதன்கிழமை, நவம்பர் 22, 2023**

வார்டுகள் 2 மற்றும் 6 க்கு பிரதிநிதித்துவம் செய்கின்ற பிராந்திய கவுன்சிலர்கள் மைக்கேல் பல்லேய்ஸ்ச்சி மற்றும் நவ்ஜித் கவுர் ப்ரார்
நேரம்: மாலை 7 மணி முதல் 8:30 மணி வரை
நிகழிடம்: ஃபெல்லோஷிப் ஹால், கிரேஸ் கனடியன் ரிஃபார்ம்ட் சர்ச், 10301 கிரெடிட்வியூ ரோடு, பிராம்ப்டன் ON

**திங்கட்கிழமை, நவம்பர் 27, 2023**

வார்டுகள் 1 மற்றும் 5 க்கு பிரதிநிதித்துவம் செய்கின்ற பிராந்திய கவுன்சிலர்கள் பால் விசெண்ட் மற்றும் ரொவீனா சான்ட்டோஸ்
நேரம்: மாலை 5 மணி முதல் 6:30 மணி வரை

நிகழிடம்: ஃபேன் "D" ஃப்ளெம் ரெஸ்டாரண்ட், 30 கில்லிங்ஹாம் ட்ரைவ், யூனிட் 503, பிராம்ப்டன் ON

வார்டுகள் 3 மற்றும் 4 க்கு பிரதிநிதித்துவம் செய்கின்ற பிராந்திய கவுன்சிலர்கள் மார்ட்டின் மெடெய்ரோஸ் மற்றும் டென்னிஸ் கீனன்

நேரம்: மாலை 7 மணி முதல் 8:30 மணி வரை

நிகழிடம்: சாட் டைம், 150 வெஸ்ட் ட்ரைவ், யூனிட் 101A, பிராம்ப்டன் ON

**செவ்வாய்க்கிழமை, நவம்பர் 28, 2023**

வார்டுகள் 7 மற்றும் 8 க்கு பிரதிநிதித்துவம் செய்கின்ற பிராந்திய கவுன்சிலர் பேட் ஃபோர்ட்டினி மற்றும் நகர கவுன்சிலர் ராட் பவர்

நேரம்: மாலை 3 மணி முதல் 4:30 மணி வரை

நிகழிடம்: மொலிஸானா பேக்கரி, 2 ஃபிலாசஃபர்ஸ் ட்ரெயில், பிராம்ப்டன் ON

வார்டுகள் 9 மற்றும் 10 க்கு பிரதிநிதித்துவம் செய்கின்ற பிராந்திய கவுன்சிலர் குர்ப்ரதாப் சிங் மற்றும் நகர கவுன்சிலரும் துணை மேயருமான ஹர்கிரத் சிங்

நேரம்: மாலை 7 மணி முதல் 8:30 மணி வரை

நிகழிடம்: மை டீ பார், 10960 கோர்வே ட்ரைவ், யூனிட் A1, பிராம்ப்டன் ON

**பிராம்ப்டன் வரவுசெலவுத் திட்டச் செயல்முறை பற்றி**

நகரத்தின் வருடாந்திர பட்ஜெட் செயல்முறையானது, தொலைபேசி டவுன் ஹால்கள், காபி குடித்தபடியான அரட்டைகள், விளம்பரங்கள், செய்தி வெளியீடுகள், சமூக ஊடகங்கள் மற்றும் நகரத்தின் வரவுசெலவுத் திட்டத்திற்கான இணையதளம் உட்பட, தகவல் தொடர்பு மற்றும் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கான முயற்சிகள் மூலம் பிராம்ப்டன் குடிமக்களை ஈடுபடுத்துகிறது, கற்கச் செய்கிறது மற்றும் தெரிவிக்கிறது.

முன்மொழியப்பட்ட இந்த வரவுசெலவுத் திட்டமானது, மேயர் பேட்ரிக் பிரவுன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டவுடன், நவம்பர் 29, 2023 புதன்கிழமை அன்று நகரத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும்.

டிசம்பர் 13, 2023 இல் இறுதி பட்ஜெட் ஒப்புதலுக்கென திட்டமிடப்பட்ட நிலையில், பொதுமக்கள் பிரதிநிதித்துவம் மற்றும் கவுன்சில் விவாதம் ஆகியவை டிசம்பர் 5 செவ்வாய்க்கிழமையன்று தொடங்கும்.

இப்போது மேயருக்கு வழங்கப்பட்டுள்ள நகரத்தின் பட்ஜெட் தொடர்பான அதிகாரங்கள் மற்றும் கடமைகளை *முனிசிபல் சட்டம், 2001*, கோடிட்டுக் காட்டுகிறது. "*கவுன்சில் தலைவரானவர், ஒழுங்குமுறைகளின்படி, நகரத்திற்கான முன்மொழியப்பட்ட பட்ஜெட்டை தயார் செய்து, நகர சபையின் பரிசீலனைக்காக நகர சபைக்கு முன்மொழியப்பட்ட பட்ஜெட்டாக வழங்க வேண்டும்*" என்று சட்டம் கூறுகிறது.

முன்மொழியப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை மேயர் அவர்கள் நகரசபைக்கு சமர்ப்பித்தவுடன், அந்த நகர சபைக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தை பரிசீலிக்க ஒரு 30-நாள் காலம் தொடங்குகிறது; அச்சமயத்தில் நகரசபையானது, மேயரின் வரவு செலவுத் திட்டத்தைத் திருத்துவதற்கான தீர்மானங்களை நிறைவேற்றலாம். ஒரு தீர்மானத்தின் மூலம் 30 நாள் காலத்தை கவுன்சில் குறைக்கலாம். 30-நாள் (அல்லது சுருக்கப்பட்ட) காலம் முடிவடைந்த பிறகு (பட்ஜெட்டைத் திருத்துவதற்கு கவுன்சில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை என்றால்), பட்ஜெட் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரவுசெலவுத் திட்டத்தைத் திருத்துவதற்கான கவுன்சில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், பட்ஜெட்டைத் திருத்தும் கவுன்சில் தீர்மானத்தின் மீது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்த மேயருக்கு 10 நாட்கள் அவகாசம் உள்ளது. வரவுசெலவுத் திட்டத்தைத் திருத்தும் கவுன்சில் தீர்மானத்தின் மீது வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகிக்க மேயர் எடுக்கும் எந்த முடிவின் மீதும், கவுன்சிலின் அனைத்து உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் மாற்றி எழுதுவதற்கு கவுன்சிலுக்கு 15 நாள் கால அவகாசம் தேவைப்படும்.

**பிராம்ப்டன் நகர பெருநிறுவன யுக்தி திட்டம்**

இந்த ஆண்டின் வரவுசெலவுத் திட்டமானது பிராம்ப்டன் நகரின் பெருநிறுவன யுக்தி திட்டம் 2022-2026, ஐ முன்னுரிமை கொள்ளச் செய்கிறது: இதில் அடங்கும் ஆறு விஷயங்கள்:

- நகர்ப்புற மையங்கள் & அண்டைப்புறங்களை வளர்த்தல்,
- கலாச்சாரம் & பன்முகத்தன்மை,
- ஆரோக்கியம் & நல்வாழ்வு,
- சுற்றுச்சூழலை தாக்குப்பிடிக்க வைத்தல் & நிலைத்த தன்மையானதாக இருக்க வைத்தல்,
- பேருந்துப் போக்குவரத்து & இணைக்கும்தன்மை, மற்றும்
- அரசாங்கம் & தலைமைப் பண்பு

**கூடுதல் ஆதாரவளங்கள்**

பிராம்ப்டன் நகரின் 2024 ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றிய மேலும் தகவல்களுக்கு: www.Brampton.ca/budget.

நகரசபைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பது பற்றிய மேலும் தகவல்களுக்கு, பிராம்ப்டன் நகரம் | கவுன்சில் மற்றும் குழுக்கள் | பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் , குழுவில் பங்கேற்றல் அல்லது சேருதல் க்கு வருகை தரவும்.

-30-

**ஊடகத் தொடர்பு**
பிராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca